**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 194/2004**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 23.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செங்கோடன் Father's Name : ராமசாமி கவுண்டர்

துவக்க நேரம் : 1.01 P.M

4, 5 <u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

ச.எண்.191/1A2 -வில் உள்ள ஏக்கர் 2.04 செண்ட் நிலமானது கடந்த 11.07.1994 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி 4ம் பிரதிவாதி நடேசனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது எனது தாத்தாவின் சொத்து, எனது பெரியப்பா எனது சொத்தை யாருக்கு ஒதுக்கினார் என தெரியாது. தற்பொழுது வரை 4ம் பிரதிவாதி தான் மேற்படி சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல எங்கள் இருவரது அனுபவத்திலும் இருந்து வருகிறது. 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் தரப்பில் செய்துள்ள பதிலுரையில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். 4ம் பிரதிவாதியின் பதிலுரையில் கடந்த 03.03.1962 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் ச.எண்.191/1A-ல் உள்ள சொத்தை எனது பெரியப்பா கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை எனது பெரியப்பாவே தயார் செய்து கொண்டார். எனது தாத்தா அதில் கையொப்பம் இடவில்லை. மேற்படி சங்கதி தொடர்பாக தாவாவை இதனால் வரை எந்த திருத்தமும் செய்யப்படவில்லை என்றாலும் மறுப்பு பதிலுரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரி தான். எனது தாயாருக்கு விவரம் தெரியாததாலும் எனது தகப்பனாருக்கு மனநிலை சரியில்லாததாலும் அவ்வாறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

2. கடந்த 03.03.1962ல் ஏற்படுத்தப்பட்ட பத்திரத்தை 4ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டும் செல்லாது என விளம்புகை கோரி பரிகாரம் கேட்டு வழக்குரை திருத்தப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி பத்திரத்தை செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்காத பட்சத்தில் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்கள் தாத்தா சொத்தில் எங்களுக்கு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் தற்பொழுது தும்பல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எவ்வளவு ஆண்டுகளாக அங்கு நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 40 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்துக்கு அருகில் எனக்கு வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அ.வ.எண்.108/2021 என்ற வழக்கை எனது சகோதரர் இளையப்பன் பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும் எனது சகோதரருக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை செல்லாது என கோரி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கு அருகில் எனக்கு சொத்து இல்லை என்றாலும் தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

3. தாவா 2ம் அயிட்ட சொத்து முழுவதும் 4ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்றாலும் அதில் பாகம் கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. அதில் எனக்கு உரிமை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்பட்டது.

9, 10 பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 1.28 P.M

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Tmt. S.Umamaheswari - O.S. No.194/2004 , Dt. 23.10.2025.